# அணைந்தது அக்னி

வைணவச் சுடராழி டி.ஏ. ஜோஸப், பாண்டிச்சேரி
18, Fourth Cross (Upstairs), Rainbow Nagar, Pondicherry 605 011
Website: http://dajoseph.50megs.com Email: deyeje@yahoo.com

திருமால் அன்பர்களுக்கு என் தெண்டனிட்ட வணக்கம். அக்னிஹோத்ரியின் கட்டுரை எண் 89 (22.10.05 நக்கீரன்) ஸ்ரீவைகுண்டத்தைப் பற்றி விமர்சிக்கிறது. இதன் ஒட்டு மொத்த பிழிவு என்னவென்று பார்த்தால், ஸ்ரீவைகுண்டத்தில் மாட மாளிகைகள், கூட கோபுரங்கள், ஆயிரங் கால் மண்டபம், மரம், செடி, கொடி, குயில், கிளி, கருடன், யானை, இவற்றோடு ஆண்களும் பெண்களும் உல்லாசமாக போகம் அனுபவிக்கிறார்கள் என்ற கருத்தை பரிகசித்து அக்னிஹோத்ரி எழுதுகிறார். அனைத்தையும் கடந்து முக்தியடைந்த பிறகு தாம்பத்யம் ஏது? உடல் ஏது? மரம்செடி ஏது? மண்டலம் ஏது? உல்லாசங்கள் ஏது? என்பது அவருடைய கிண்டல். தான் பொய் சொல்லவில்லை என்பதை நிரூபிப்பதற்காக மோட்சத்தைப் பற்றிய உபநிஷத் வாக்யங் களையும் மேற்கோள் காட்டியிருக்கிறார். வைகுண்டம் என்பது மற்றொரு காமலோகமே தவிர அது ஞான லோகமல்ல என்பது அவர் கருத்து. விஷயத்தைப் பெரிதுபடுத்துவதற் காக அவர் "நீ விரும்பும் பெண் உன் முன்னே வந்து நிற்பாள்! உன்னைப் பார்த்து சிரிப்பாள்! நெருங்குவாள்! அணைப்பாள்!" என்று ஆபாசப் புத்தகப் பாணியில் எழுதியிருக்கிறார். அவருக்கு மிகவும் விருப்பமான ஒரு விஷயம்!

மோட்சம் என்பது உயர்ந்த ஞானம் உள்ளவர்களால் புரிந்து கொள்ளப்பட வேண்டிய விஷயம். அரைகுறை ஞானம் உள்ளவர்களோ, அடிமட்ட அறிவுள்ளவர் களோ அதை விளங்கிக் கொள்ளவும் முடியாது; விளக்கிக் காட்டவும் முடியாது! உச்சக்கட்ட அறியாமை உள்ள ஒருவர் இதைப் பற்றிப் போதிக்கத் தொடங்கினால் அது இப்படி வக்கிரமான கண்ணோட்ட மாகத் தான் முடியும்.

ஸ்ரீவைகுண்டத்தைப் பற்றி எழுதிய நபர் யார்? அவர் கொக்கோக்கம் ரசிகரா? அல்லது சினிமா வசனகர்த்தாவா? அல்லது நாவலாசிரியரா? இல்லை! உலகில் ஞானம் எது அஞ்ஞானம் எது என்று முதலில் தான் உணர்ந்து அதிலிருந்து தப்பிக்கும் வழியை கண்டுபிடித்து அதை தானும் கடைப்பிடித்து மற்றவர்களுக்கும் உபதேசித்த ஒரு முனிவன். தன் மன அடக்கத்தின் பலனால் தான் அடைந்த ஞான திருஷ்டியைப் பயன்படுத்தி மந்த்ர த்ரஷ்டா என்ற நிலைமையில் இருந்து, முக்தியைப் பார்த்து, அதை உபநிஷதமாக வழங்கியவன். அந்த முனிவனுக்கு ஆண் பெண் சேர்க்கை, ஆயிரங்கால் மண்டபம் இவையெல்லாம் அஞ்ஞான உலகத்தில் காணப்படுபவை என்று தெரியாதா?

ஜீவாத்மாவானது தாமஸம், ராஜசம், சாத்விகம் என்ற மூன்று குணங்களையும் உதிர்த்து சூட்சும சரீரத்தையும் களைவதற்காக விரஜை என்ற நதியிலே ஸ்நானம் செய்கிறது. வி + ரஜஸ் என்பது விரஜா என்று வருகிறது. அதாவது கொஞ்சநஞ்ச ரஜோ குணமும் கழுவப்படும் இடம் விரஜை என்ற நதி. காமம் என்பது ராஜச குணத்தின் செயல். விரஜையில் குளித்தபிறகு ஜீவாத்மாவுக்கு ராஜசம் இல்லை. அதனால் தான் ஸ்ரீவைகுண்டத்துக்கு அபராஜிதா என்று பெயர் வைத்தார்கள். அபராஜிதா என்றால் முக்குணங்களால் ஜெயிக்கமுடியாத உலகம் என்று பொருள்.

ஸ்ரீவைகுண்டத்தில் சுத்த சத்துவம் என்ற குணம் மட்டுமே உண்டு. பலகோடி ஜன்மங்களிலும் தன்னுடன் அந்தர்யாமியாக உறைந்து, தன்சுக துக்கங்களில் பங்கு கொண்டு, தனக்கு ஒரு ஞானாசிரியனைக் காட்டி, சாத்திரங்களை அறிவுறுத்தி, அஞ்ஞானத்தைத் தெளிவித்து, முக்தியும் அளித்த பரமாத்மா மீது ஜீவாத்மா அளவில்லாத நன்றியுணர்வும் அன்பும் கொள்ளுகிறது. அந்த உத்தம உணர்வை பரமாத்மாவிடம் வெளிக்காட்டத் துடிக்கிறது. உருவங்களையெல்லாம் கடந்த சுத்த ஸத்வ நிலையில் தன்னுடைய நன்றிப் பெருக்கையும் அதன் விளைவால் ஏற்பபட்ட கைங்கரியத் துடிப்பையும் ஒரு சரீரம் இல்லாமையால் வெளிகாட்ட வழியின்றித் தவிக்கிறது. இந்தத் தவிப்பைப் போக்குவதற்காக வாத்ஸல்யம், பொங்கும் ஒரு தாயைப் போன்ற பகவான் தான் ஒரு சரீரம் எடுத்து, தனக்கு ஜீவாத்மாக்கள் தொண்டு செய்வதற்காக அவர்களுக்கும் சரீரங்களை வழங்குகிறான். அந்த உடல்கள் ப்ரக்ருதியை கடந்த அப்ராக்ருத திருமேனிகள். முக்குணவசப்பட்டவையல்ல.

இந்த அப்ராக்ருத உடல் பெற்ற ஜீவாத்மா தன் சேவைத்தினவை தீர்த்துக் கொள்வதற்காக பகவத் திருமேனிக்கு சாமரம் வீசுதல், குடை பிடித்தல், ஆபரணம் ஆகி அவர் திருமேனியை அலங்கரித்தல், "அஹம் அன்னம் அஹம் அன்னம்" என்றும் "பல்லாண்டு பல்லாண்டு" என்றும் ஆனந்தக் கவிபாடுதல் முதலிய செயல்களைச் செய்கின்றது. எண்ணற்ற இப்படிப்பட்ட ஆத்மாக்கள் நிறைந்ததுதான் ஸ்ரீவைகுண்டம் இந்த ஆனந்த சாம்ராஜ்ஜியத்திலே பெருமாள் கோவிலில் காணப்படும் சகல ராஜ உபச்சாரங்களும் குறைவற நடக்க வேண்டும் என்று தான், அங்கே மாளிகைகள் கோபுரங்கள், மரம், சோலை, கிளி, அலங்காரங்கள் முதலியவை இருக்கின்றன. அவையும் அப்ராக்ருத திருமேனி தான்.

மோட்ச இன்பம் என்பது என்ன? இதைப் பற்றிப் பலரும் பலவிதமாக எழுதி இருக்கிறார்கள். பதஞ்சலி முனிவர் யோகக் கண்ணோட்டத்தில் எழுதி இருக்கிறார். அதற்கு கைவல்யம் என்று முன்னோர்கள் பெயரிட்டிருக்கிறார்கள். சாலோக்ய, சாரூப்ய, சாமீப்ய, சாயுஜ்ய மோட்சங்கள் என்று வைதிக நூல்களில் படிக்கிறோம். 5 வித பேதங்கள் சொல்லும் மத்வர் இதையே சற்று வித்யாசமாக எழுதி இருக்கிறார். எது எப்படி இருந்தாலும் மோட்ச இன்பத்துக்கு அடிப்படைத் தேவை என்னவென்றால் ஆத்மாவைப் பந்தப்படுத்தி இருக்கும் கட்டுகள் உடைய வேண்டும்! இதை எல்லோரும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அந்தக் கட்டுகள் உடையும்போது அந்த ஆத்மா முழு விடுதலை பெற்று, அனந்தமான ஆற்றல்களும் இன்பமும் தனக்கு இருப்பதை உணர்கிறது. இந்த நிலையில் அந்த ஆத்மாவினால் அடைய முடியாத இன்பம் என்று ஒன்றுமே இல்லை. இப்படித்தான் உபநிஷதங்களில் முனிவர்கள் கூறி இருக்கிறார்கள். இந்த இடத்தில் சிலர் பாமரத்தனமான ஒரு கேள்வி எழுப்பினார்கள்! அது என்னவென்றால் கர்மானுசாரமாக இந்த மாயா உலகத்தில் ஆத்மா அனுபவிக்கும் இன்பங்களுக்கு அது ஸ்ரீவைகுண்டத்தில் ஆசைபட்டால் அங்கே அது கிடைக்குமா என்பது தான் அது. செத்ததன் வயிற்றில் சிறியது பிறந்தால் அது அத்தைத் தின்று அங்கே கிடக்கும் என்று பெரியவர்கள் சொன்னார்கள். மாயா உலக வெளிப்பாடுகளை போகப் பொருள்களாக எண்ணி துய்த்துப் பழகிய ஜீவாத்மாவுக்கு மோட்சத்தைப் பற்றிய இன்பத்தை எடுத்துக் கூறினால் இப்படிப்பட்ட சந்தேகங்கள் தான் வரும்.

ஒரு பிச்சைக்காரக் குழந்தையை ஒரு பணக்காரன் தத்தெடுக்க விரும்புகிறான் என்று வைத்துக் கொள்வோம். அந்த குழந்தைக்கு தன்பால் கவர்ச்சி ஏற்பட வேண்டும் என்பதற்காக அந்தப் பணக்காரன் அந்த குழந்தையிடம் "நீ என்னோடு வந்தால் உனக்கு கார் பங்களா நிலம் தோட்டம் விலையுயர்ந்த ஆடை நகை எல்லாம் தருவேன்" என்கிறான். அதையெல்லாம் கவனமாக கேட்டுவிட்டு அந்த குழந்தை "எனக்கு லாலிபாப் கிடைக்குமா" என்று பதட்டத்துடன் கேட்கிறது. ஏனென்றால் அதன் சிந்தனை மட்டம் லாலிபாப் அளவில்தான் இருக்கிறது. அதைக் கேட்ட பணக்காரன் அந்த குழந்தையைத் திருப்திபடுத்துவதற்காக "உனக்கு ஒரு வீடு நிறைய லாலிபாப், ஒரு வீடு நிறைய பிஸ்கட், ஒரு வீடு நிறைய சாக்லேட் தருவேன்", என்று கூறி அந்தக் குழந்தையை வசப்படுத்துகிறான்.

அதுமாதிரி தான் நம்முன்னோர்கள் "ஸ்ரீவைகுண்டத்திலே நீ எந்த இன்பத்துக்கு ஆசைப்பட்டாலும் உனக்கு அது கிடைக்கும் இறந்து போன உன் முன்னோர்களோடு பேச வேண்டுமா? அழகான பூங்கா வேண்டுமா? நளினமான பெண்ணழகி வேண்டுமா? எல்லாம் கிடைக்கும்" என்று சாதுர்யமாகச் சொல்லி வைத்தார்கள். நொண்டிக் கழுதைக்கு சறுக்கினது தான் சாக்கென்று நம் பெருமதிப்பிற்குரிய அக்னிஹோத்ரி இதைப் பிடித்துக் கொண்டார். இன்பக் கேளிக்கைகள் நிறைந்த ஒரு உலகத்தை கற்பனை செய்து அதைத் தான் மோட்ச லோகம் என்று நம் முன்னோர்கள் வர்ணித்திருக்கிறார்கள் என்று பரிகசிக்கிறார். இந்த ஏளனப் பேச்சை ஒரு சிறுவனோ ஒரு நாத்திகனோ, ஒரு வெள்ளையனோ, ஒரு பாமர கிராமத்தானோ பேசியிருந்தால் அதை நாம் புரிந்து கொள்ளலாம்! ஆனால் ஆசாரிய குலத்தில் பிறந்து, பிராம்மண சாஸ்திரங்களைக் கற்று, இன்றுவரை பூணூலும் திருமண்ணும் அணிந்து, பலநூறு சிஷ்யர்களுக்கு ஆத்ம உத்தாரண கர்த்தா என்கிற ஸ்தானத்தில் இருந்து கொண்டு, இந்த அக்னி ஹோத்ரி இப்படி எழுதுகிறாரே! ஆனால் இந்த வருத்தத்துக்கும் சமீபத்தில் எனக்கு ஒரு சாந்தி கிடைத்திருக்கிறது. அது என்னவென்றால் நவம்பர் – 2005 பாஞ்சசன்யத்தில் ஒரு கட்டுரை

வந்திருக்கிறது. ஸ்ரீவைஷ்ணவ கலாச்சார பாதுகாப்பு இலக்கத்தின் சார்பாக மூவர் இந்த அக்னி ஹோத்ரியை நேரில் சந்தித்திருக்கிறார்கள். அப்போது அவர்களிடம் இந்த அக்னி ஹோத்ரி கீழ்க்கண்ட கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்.

1. திருப்பதியில் இருப்பது விஷ்ணு இல்லை. அங்கே விஷ்ணு இருப்பதாக சிலப்பதிகாரம் கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது!.

2. "ஆப்கானிஸ்தான் தான், ப்ராம்மணர்களின் பூர்வீகம். மனைவிகளைக் கூட்டிக் கொண்டு வரமுடியாமல் ஆண் ப்ராம்மணர்கள் மட்டும் இவ்விடத்திற்கு வந்து விட்டார்கள். மலைகளைத் தாண்டி வரமுடியாத அந்த மனைவிகள் அங்கேயே இருக்க, இவ்விடத்திற்கு வந்த ப்ராம்மணர்களுடைய புதுமனைவிகளும் பின் தொடர்ந்த தாயார் வம்சாவளியும் ப்ராம்மண ஜாதி இல்லை.

3. இதற்கு ஆதாரம் திவச மந்திரத்தில் இருக்கிறது. அதில் ப்ராம்மணத் தாய்மார்கள் தவறான வழியில் போகிறவர்கள் என்ற பொருள் உள்ள மந்திரம் இருக்கிறது.

4. ஸ்ரீராமானுஜர் உருவ வழிபாட்டினை ஸ்ரீபாஷ்யத்தில் கண்டித்திருக்கிறார்.

இந்தக் கருத்துக்களைப் படித்தபிறகு நக்கீரன் பத்ரிகையில் அக்னி ஹோத்ரி எழுதி இருக்கிற கட்டுரைகளால் ஏற்பட்ட வருத்தம் எனக்குக் குறைந்து விட்டது. எப்படியென்கிறீர்களா? ஒருவன் கிறுக்கு மாதிரி பேசுகிறானே என்று அவனுடைய ஒரு சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்கும் போது ஒரு வைத்யர் அவனை பரிசோதித்துவிட்டு 'இவன் கிறுக்குமாதிரி நபர் இல்லை! இவன் முழு கிறுக்கேதான்' என்று தீர்மானமாகச் சொல்லி விட்டால் அந்த குருவுக்கு இவனை எப்படி திருத்துவது என்ற கவலை ஏற்படாதல்லவா? அவனை ஒரேயடியாக அவனுடைய தாய் தகப்பனிடம் அனுப்பிவிட்டு நிம்மதியாக வேறு வேலையை பார்ப்பார் அல்லவா? அதுபோல ஒரு உயர்ந்த ஸ்தானத்தில் இருக்கும் அக்னிஹோத்ரி இப்படி எழுதுகிறாரே என்று நான் வருந்திக் கொண்டிருந்த போது பாஞ்சஜன்யம் கட்டுரையை படித்தபிறகு 'இது ஒரு முற்றி போன கேஸ், இது இப்படித்தான் எழுதும்' சென்று நிம்மதி யடைந்து விட்டேன்.

பாஞ்சஜன்யத்தின் கட்டுரை ஆசிரியர் 'நமது சமூகத்தைச் சார்ந்த பல்லாயிரம் வக்கில்கள் இருந்தும் நக்கீரன் மீதோ அஹோ மீதோ சட்டரீதியான நடவடிக்கையை பதிவு செய்யாதது. வேதனை' என்று வருந்துகிறார். அன்று 'அஞ்சி அஞ்சிச் சாவார்! இவர் அஞ்சாத பொருள் இல்லை அவனியிலே'' என்று பாரதி துடித்தான். இன்று நாம் துடிக்கிறோம்.

நக்கீரன் இதழில் அக்னிஹோத்ரின் கட்டுரை வெளிவருவது நின்றுவிட்டது என்பதையும் அறிந்து கொண்டேன். நம்முடைய எதிர்ப்புக்கு வெற்றி கிடைத்து விட்டது என்பது மகிழ்ச்சியான செய்திதான் என்றாலும், அதற்குள் எத்தனை எத்தனை தீய எண்ணங்கள் விதைக்கப்பட்டு விட்டன என்பதை எண்ணும்போதுதான் வேதனை அதிகமாகிறது. இனியும் இந்த செத்த பாம்பை நாம் தொடர்ந்து நாம் அடிக்க வேண்டுமா அல்லது ஏதேனும் ஆக்க பூர்வமான விஷயங்களை நாம் தொடர்ந்து பரிமாறிக் கொள்ளலாமா என்பதை வாசகர்களாகிய நீங்கள்தான் கூறவேண்டும்!